*1995 ஏப்ரல் 28]*

### (இ) குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் (திருத்தச்) சட்டமுன் வடிவு, 1995.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *1995–ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1995–ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றம் வடிகால் வாரியம் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,*

*ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.*

*மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஈ) குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் வாரிய (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1995.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *1995–ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் வாரிய (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[திரு. டி.எம். செல்வகணபதி] [1995 ஏப்ரல் 28

"1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் வாரிய (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 9. மானியக் கோரிக்கைகள், 1995-96, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 32-வீட்டுவசதி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1995-96-ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும் தொடர்ச்சி. மானியக் கோரிக்கை எண் 32-வீட்டுவசதி, மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சே. ரகுபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வீட்டுவசதி பற்றிய 32-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 52,37,13,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.